# சைதாப்பேட்டை - சோழிங்கநல்லூர் - வேளச்சேரி தொகுதிகளில் நடைபயிற்சியின்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு!

## சென்ற வழியெல்லாம் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2026) சென்னை, சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், கழக வேட்பாளருமான அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2026) சென்னை, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கழக வேட்பாளர் அரவிந்த் ரமேஷ் அவர்களை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார். உடன் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2026) சென்னை, சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், கழக வேட்பாளருமான அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து ஆட்டோவில் பயணித்து பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2026) சென்னை, சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கழக வேட்பாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியனை ஆதரித்து அங்கு கரும்பு ஜூஸ் கடை நடத்தும் வியாபாரியிடம் வாக்கு சேகரித்தார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2026) சென்னை, வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஹசன் மௌலானா அவர்களை ஆதரித்து நடந்து சென்று பொதுமக்களைச் சந்தித்து வாக்கு சேகரித்தார். உடன் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் உள்ளனர்.